**புத்தசாசன நிதியம் - 2017**

புத்தசாசன நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் நிதியத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு**

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நிலையான சொத்துக்கள் | 10,571,873 |
| முதலீடுகள் | 483,124,345 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 34,550,797 |
| **கூட்டுத்தொகை** | **528,247,015** |
| **இது பிரதிநிதித்துவப்படுத்துபவை** | |
| புத்தசாசன நிதியம் | |
| நானாவித நன்கொடைகள் | 512,425,953 |
| சுனாமி உதவிகள் | 14,472,266 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 1,348,796 |
| **கூட்டுத்தொகை** | **528,247,015** |

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 34,403,622 |
| மொத்தச் செலவினம் | (6,458,049) |
| **மிகை** | **27,945,573** |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 8 (ஆ) பிரிவு | முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் இலங்கை மத்திய வங்கியில் திறக்கப்பட்டுள்ள நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும், வருமானம் குறித்த கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் குறித்த முதுலீட்டிற்கே மீண்டும் சேர்க்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 395(ஈ) | வங்கிக் கணக்கொன்று உள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்க கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் 2017 ஆம் ஆண்டின் யூலை மாதத்தலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரை வங்கி கணக்கிணக்க கூற்று கணக்காய்வு சந்தர்ப்பமான 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீ.எப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.2 (ஈ) பந்தி | வங்கிக் கணக்குகள் முறையாக இணக்கஞ் செய்யப்பட்டு காலாண்டு ரீதியாக அறிக்கை தயாரித்து அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்வாக சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 செயற்றாடுகளும் மீளாய்வாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 30,825,000 கிரயமான 8 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில மீளாய்வாண்டில் ரூபா 4,000,000 கிரயமான 3 செயற்திட்டங்களே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 13 இளைய பிக்கு நிறுவனங்களுக்காக 156 மாதங்களுக்கு படிகள் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 130 மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. சகல நிகாயாக்களுக்கும் தரப்பினருக்குரிய விஹாரைகளில் 100 இளம் பிக்கு நிலையங்களை தாபிப்பதற்காக புத்தசாசன நிதியத்தின் நிர்வாக சபை, இலக்காக கொண்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் 16 இளைய பிக்கு நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் 13 வரை குறைவடைந்திருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

மீளாய்வாண்டில் புத்தசாசன நிதியத்தின் மொத்த பெறுவனவுகள் ரூபா 25,923,838 ஆக இருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட ஆண்டில் செயற்திட்ட மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 11,748,870 ஆக இருந்தது. இதிலும் நிதியத்தின் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்காக கிடைத்த வருமானத்தில் 42 சதவீதம் அளவிலான ரூபா 10,971,040 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு மிகையான பணம் முதலீடு செய்யப்பட்டு வந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கையின் பிரகாரம் மொத்த முதலீடு ரூபா 483,124,345 ஆக இருந்தது. முதலீடுகளிலிருந்து வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ஆகக் குறைந்த வட்டிக்கு ஈடாகும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களையோ செயற்படுத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது.

### 3.3 பதவியணி முகாமைத்துவம்

புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் பொருத்தமான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆட்சேர்க்கும் போது அவர்களின் ஊதியத்தை புத்தசாசன நிதிய வருமானத்திலிருந்து கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் செயற்பாடுகளுக்காக புத்தசாசன அமைச்சின் நான்கு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 1,326,072 சம்பளம் மீளாய்வாண்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 133 (ஆ) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக நிதியத்திற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுபாடு

---------------------------------

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 இன் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க பாதீடு தயாரிக்கப்பட்டு தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.